ආයතනයේ නම : ශ්‍රී ලංකා දුම්රිය දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තු ප්‍රකාශනමාලා අංක : **491**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද ශ්‍රී ලංකා දුම්රිය දෙපාර්තමේන්තුවට සම්බන්ධ වාර්තාව සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ සහ ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

நிறுவனத்தின் பெயர் : **இலங்கை புகையிரதத் திணைக்களம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : **491**

பாராளுமன்ற பொது கணக்கு குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை புகையிரதத் திணைக்களம் தொடர்பான அறிக்கை தொடர்பாக கௌரவ நிதிஇ திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் நிலையியல் கட்டளை இலக்கம் 119(4)-இன் கீழ் எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் சமர்ப்பிப்பு

Name of the Institution : Sri Lanka Railways

Parliamentary Series : 491

Submission of the observations and measures taken by Hon. Minister of Finance, Planning and Economic Development under Standing Order No. 119(4) regarding the report on the Sri Lanka Railways tabled by the Committee on Public Accounts of Parliament, to the Parliament

මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: MF06/10//PS/491
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2026.05.25

கௌரவ பாராளுமன்ற சபைத்தலைவர் ஊடாக,
மாண்புமிகு சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்
ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே

அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள் தொடர்பாக பொதுக் கணக்குகள் குழுவினால் (COPA) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிதித்துறைக்கு பொறுப்பான அமைச்சரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானங்கள் சமர்ப்பிக்கப்படுதல்.
பொதுக் கணக்குகள் குழு அறிக்கையின் பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 491 – இலங்கை புகையிரத திணைக்களம்

நிலையியற் கட்டளை இலக்கம். 119(4) இன் பிரகாரம் , பொதுக் கணக்குகள் குழுவால் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்த பின்னர், பொதுக் கணக்குகள் குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் / பரிந்துரைகள் / உத்தரவுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை உரிய அமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

அதன்படி அதன்படி, பத்தாவது பாராளுமன்றத்தின் முதல் அமர்வின் போது நடத்தப்பட்ட இலங்கை புகையிரத திணைக்களம் மீதான விசாரணையின் அடிப்படையில் பொதுக் கணக்குகள் குழு (COPA) தொகுத்த அறிக்கை , பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 491-இல் அடங்கியுள்ளது. அந்த அறிக்கை தொடர்பாக கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கையை நான் இதன்மூலம் சமர்ப்பிக்கிறேன்.

பொதுக் கணக்குகள் குழுவின் (COPA) பரிந்துரைகள் தொடர்பான தனது முன்னேற்ற அறிக்கையை புகையிரத திணைக்களம் சமர்ப்பித்துள்ளது. இவ்விடயத்திற்கான நேரடிப் பொறுப்பு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சை சார்ந்தது. மேலும், அறிக்கையின் உள்ளடக்கங்கள் தொடர்பாக, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அதிகார எல்லைக்குள் வரும் விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட அவதானிப்புகளும் நடவடிக்கைகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன என்ற உண்மையை மாண்புமிகு பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகினறேன்

ஒப்பம்
அநுர குமார திசாநாயக்க
நிதி ,திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

பாராளுமன்றத் தொடர் எண் : 491

திணைக்களத்தின் பெயர் : இலங்கை புகையிரதத் திணைக்களம்

பாராளுமன்ற பொது கணக்கு குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை புகையிரதத் திணைக்களம் தொடர்பான அறிக்கை தொடர்பாக கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் நிலையியல் கட்டளை இலக்கம் 119(4)-இன் கீழ் எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் சமர்ப்பிப்பு

இல	**குழுவின் பரிந்துரைகள்**	**பரிந்துரைகளைச் செயல்படுத்த நிறுவனம் எடுத்துள்ள நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை**
01	கணக்காய்வு மற்றும் கணக்காய்வு குழு கூட்டங்களை நடத்துதல்.	முகாமைத்துவக் **கணக்காய்வு** திணைக்களத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் DMA/01/2019 மற்றும் அதனைத் தொடர்ந்தான சுற்றறிக்கை இலக்கம் DMA/1/2025 ஆகியவற்றின்படி, பிரதான கணக்கீட்டு / கணக்கீட்டு உத்தியோகத்தர், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மாவட்ட செயலகங்கள் மற்றும் விஷேட செலவினப் பிரிவுகள் முழுவதும், நடப்பு ஆண்டில் காலாண்டுக்கு ஒரு கூட்டம் என்ற விகிதத்தில், குறைந்தது நான்கு (04) **கணக்காய்வு** மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளார். இது தொடர்பாக, முகாமைத்துவ **கணக்காய்வு** திணைக்களமானது அந்தந்தக் குழுவில் ஒரு பிரதிநிதியின் பங்கேற்பை மட்டுமே உறுதி செய்யும். அதன்படி, இலங்கை **புகையிரதத் திணைக்களமா**னது திட்டமிட்டபடி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடத்தத் தவறியது தொடர்பான அவதானிப்பு தொடர்பாக, **கணக்காய்வு** மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களை நடத்துவதற்கான முதன்மைப் பொறுப்பு அந்தந்தத் திணைக்களத்தையே சாரும் என்றும், அதேவேளையில் அக்கூட்டங்களில் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளைப் பரிந்துரைப்பதற்கும், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டுதலை வழங்குவதற்கும் முகாமைத்துவ **கணக்காய்வு** திணைக்களத்தின் பொறுப்பாகும் என்றும் பணிவுடன் தெரிவித்துக்

		கொள்கிறோம்.
02	பாராளுமன்றத்தில் ஆண்டு அறிக்கைகளைத் தாக்கல் செய்வதில் தாமதம் <u>குழுவின் பரிந்துரைகள்</u> • ஆண்டு அறிக்கைகளை எதிர்வரும் காலங்களில் தாமதமின்றி சமர்ப்பிக்க வேண்டும் என, அக்குழு திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பரிந்துரைத்தது. • தாமதங்களுக்கான காரணங்களை விசாரிக்கும் பொருட்டு, சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் பணியாற்றிய முன்னாள் புகையிரத திணைக்கள பொது முகாமையாளர் மற்றும் அமைச்சின் செயலாளர்களை அடுத்த கூட்டத்திற்கு வரவழைப்பதற்கு குழு மேலும் முடிவு செய்தது. தேவையான தகவல்களைப் பெற்று, சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் குழுவின் முன் வரவழைக்குமாறு குழுவின் செயலாளருக்கும் குழு பரிந்துரைத்தது.	அமைச்சுக்கள், திணைக்களங்கள் , மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு, வருடாந்த செயலாற்று கை அறிக்கைகளைத் தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தொடர்பான வழிகாட்டுதல் வழங்கும் பொருட்டு, அத்தகைய அறிக்கைகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்கள் தொடர்பான வழிகாட்டுதல் இலக்கம் 14 உடன், 2020.08.20 ஆம் திகதியிடப்பட்ட தியிட்ட பகிரங்க நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020-இன் பத்தி 12-இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கோவிட்-19 உலகளாவிய பெருந்தொற்றுச் சூழ்நிலை காரணமாக, அரச நிறுவனங்களில் குறைந்த எண்ணிக்கையிலான அதிகாரிகளே தினசரிப் பணிகளுக்கு வருகை தந்தனர். அதன்படி, நிதி அமைச்சால் 2021.05.12 ஆம் திகதியிடப்ட்ட PFD/RED/REG/02/CC/01/2021 என்ற கடிதத்தின் மூலம், 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு 2021.06.30 வரை நீடிக்கப்பட்டது. மேலும், 2022.05.26 ஆம் திகதியிடப்பபட்டட PFD/RED/REG/02/CC/2022 என்ற கடிதத்தின் மூலம், 2021 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு 2022.06.30 வரை நீட்டிக்கப்பட்டது. மேலும், 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதி முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 47(4)-இன் விதிகளின் கீழ், அந்தச் சட்டத்தின் பிரிவு 3-இன் துணைப்பிரிவு (2)-இன் பத்தி (அ)-இன் துணைப்பத்திகள் (i) மற்றும் (ii)-இன் கீழ் வரும் ஒவ்வொரு பொது நிறுவனமும், தொடர்புடைய எழுத்துமூல சட்டங்கள் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட கட்டளைகளில் வி ஷேடமாக கூறப்பட்டுள்ள தேவைகளுக்கு

		இணங்கும் வகையில் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலிருந்து நூற்று எண்பது நாட்களுக்கு மிகாத காலத்திற்குள், கணக்குகள் மற்றும் பிற நிதிநிலை அறிக்கைகள் உள்ளிட்ட பிற ஆவணங்களுக்குள் ஒரு செயலாற்றுகை அறிக்கை/ஆண்டு அறிக்கையை வெளியிட வேண்டும். அந்தச் சூழலில், பாராளுமன்றத்தில் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவை "நிதியாண்டு முடிந்து 150 நாட்களுக்குள்" என்பதிலிருந்து "நிதியாண்டு முடிந்து 180 நாட்களுக்குள்" எனத் திருத்தி, 2025.05.30 ஆம் திகதியிடப்பட்ட பகிரங்க நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2025 வெளியிடப்பட்டது.
03	கணக்காய்வு விசாரணைகளுக்குப் பதிலளிக்காதிருத்தல்.	இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அதிகார எல் லைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததால், மேலதிகக் அவதானிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை. இது அந்தந்தத் தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தருக்குரிய பொறுப்பாகும்.
04.	04. ஆண்டு பெறுகை திட்டத்திற்கு ஒப்புதல் பெறத் தவறுதல் மற்றும் கணக்காய்வு வினவல்களுக்குப் பதிலளிக்கத் தவறுதல் <u>குழுவின் பரிந்துரைகள்</u> • இவ்விடயம் தொடர்பான காரணங்களை விசாரிப்பதற்காக, , சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் பணியாற்றிய முன்னாள் புகையிரத திணைக்கள பொது முகாமையாளர் மற்றும் அமைச்சின் செயலாளர்களை அடுத்த கூட்டத்திற்கு வரவழைப்பதற்கு குழு	2020.08.28 ஆம் திகதியிடப்பட்ட பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020-இன் பந்தி 04, அமைச்சுக்கள், திணைக்களங்கள் , மாவட்டச் செயலகங்கள், அடுத்த ஆண்டுக்கான மீண்டெழும் மற்றும் மூலதனத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக வருடாந்த பெறுகைத் திட்டங்களைத் தயாரித்து, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற தேவையை வழங்குகிறது. இந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்கள் தொடர்பான வழிகாட்டுதல் இலக்கம் 13-உம் வெளியிடப்பட்டுள்ளது., தேசிய பெறுகை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, 2025.01.01 முதல் நடைமுறைக்கு வந்த, பொருட்கள், பணிகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளுக்கான பெறுகை வழிகாட்டுதல்கள் - 2024, முதன்மை பெறுகை திட்டம், வருடாந்த உத்தேச பெறுகை திட்டம் மற்றும் விரிவான வருடாந்த பெறுகை திட்டம் ஆகியவற்றைத் தயாரித்தல் மற்றும் ஒப்புதல் அளித்தல் தொடர்பான விதிகளை உள்ளடக்கியுள்ளது.

	மேலும் முடிவு செய்தது. தேவையான தகவல்களைப் பெற்று, சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் குழுவின் முன் வரவழைக்குமாறு குழுவின் செயலாளருக்கும் குழு பரிந்துரைத்தது. • ,ஒரு வார காலத்திற்குள் (2025.05.16க்குள்) நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று குழு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பரிந்துரைத்தது . பெறுகை செயல்முறையில் உள்ள குறைபாடுகள் காரணமாக, தி ணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்ட விலையுயர்ந்த இயந்திரங்கள், பட்டறைகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டிய குழு, 2012-ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய பெறு கைகள் தொடர்பாக முறையான சாத்தியக்கூறு	

09	ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதா? என்பதுடன் பரிந்துரைக்கப்பட்ட பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டதா என்பது தொடர்பாக குழுவிடம் ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு தி ணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பரிந்துரைத்தது.	
05.	**செயல் திட்டம்** **குழுவின் பரிந்துரைகள்** • இந்த கணக்காய்வு விவகாரம் தொடர்பாகக் குழு எந்தப் பரிந்துரைகளையும் அளிக்கவில்லை.	செயல் திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பான விதிகள், பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்கள் மற்றும் தரவு உள்ளீட்டிற்கான வழிகாட்டுதல்கள் உட்பட, அந்த நோக்கத்திற்காக வெளியிடப்பட்ட வழிகாட்டுதல் இலக்கம் 12 உடன் சேர்த்து, 2020.08.28 ஆம் திகதியிடப்பட்ட பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020-இன் பந்தி 03-இன் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.
06	மாஹோ முதல் ஓமந்தாய் வரையிலான வழித்தடத்தில் புகையிரத பாதை புனரமைப்புக்காக அகற்றப்பட்ட பழைய ஸ்லீப்பர்கள் மற்றும் தண்டவாளங்கள் பயன்படுத்தப்படாமலும், அதன் விளைவாக சிதைந்தும் போதல்.	இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அதிகார எல் லைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததால் இது தொடர்பாக மேலதிகக் அவதானிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை.
07	மஹோவிலிருந்து அனுராதபுரம் வரையிலான பிரிவின் சமிக்ஞை அமைப்பு	இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அதிகார எல் லைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததால் இது தொடர்பாக மேலதிகக் அவதானிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை.
08	காட்டு யானைகள் பு கையிரதங்கள் மீது மோதுகின்றன.	இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அதிகார எல் லைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததால் இது தொடர்பாக மேலதிகக் அவதானிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை.
09	திணைக்களத்திற்குச் **சேர**	இந்த வருமானதை௦தை மீட்பதும், அதைப்

	வேண்டிய வருமானம் நிலுவையை வசூலித்தல் .	பின்தொடர்வதும் கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு பொறுப்பாகும் என்பதைச் சுட்டிக்காட்டலாம்.
10	இலங்கை பு கையிரதங்கள் க்குச் சொந்தமான நிலங்கள்/சொத்துக்கள் அடங்கிய தரவுத்தளத்தை நிறுவத் தவறியது மற்றும் சொத்துக்களை முறையற்ற முறையில் ஆவணப்படுத்தியது.	இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அதிகார எல் லைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததால் இது தொடர்பாக மேலதிகக் அவதானிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை
11	ஹட்சன் டெலிகம்யூனிகேஷன்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் இலங்கை புகையிரத திணைக்களம் ஆகியவற்றால் புகையிரத பாதையில் ஒரு கூட்டுத் திட்டத்தை செயல்படுத்துதல்	இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அதிகார எல் லைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததால் இது தொடர்பாக மேலதிகக் அவதானிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை
12	ரத்மலான தலைமை இயந்திரப் பொறியாளர் அலுவலக வளாகத்திலும் , புகையிரதங்கள் நிலையங்களிலும் என்ஜின் மற்றும் பவர் செட்கள் சுமார் 01 முதல் 08 ஆண்டுகள் வரை நிறுத்தி வைக்க புகையிரத ப்படுகின்றன.	குழுவின் பரிந்துரை எதுவும் இல்லை.
13	புகையிரதங்களுக்கு **உள்ளேயும்** புகையிரத முற்றங்களுக்கி டையேயும் **நிகழும் திருட்டுகள்**	இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அதிகார எல் லைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததால் இது தொடர்பாக மேலதிகக் அவதானிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை
14	புகையிரத **சேவைகளில் அடிக்கடி ஏற்படும் பழுதுகள் மற்றும்** திணைக்களத்தின் **செயல்திறன் இன்மை.**	இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அதிகார எல் லைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததால் இது தொடர்பாக மேலதிகக் அவதானிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை
15	திணைக்கள்த்தின் பதவியணி **அமைப்பு.**	குழுவின் பரிந்துரை எதுவும் இல்லை.
16	புகையிரத **தண்டவாளத்தில் நிலவும் பிரச்சினைகள்.**	குழுவின் பரிந்துரை எதுவும் இல்லை.
17	பழைய களனி **புகையிரத** பாலத்தின் கட்டுமானம்	குழுவின் பரிந்துரை எதுவும் இல்லை.

	மற்றும் மாற்றுத் திட்டம்	
18	ரத்மலான தலைமை இயந்திரப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்குள், முழுமையாகப் பயன்படுத்தப்படாத இயந்திரங்களும் கழிவுப் பொருட்களும் குவிந்து கிடப்பது.	குழுவின் பரிந்துரை எதுவும் இல்லை.
19	எம் - 11 தொடர்வண்டி என்ஜின்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பராமரித்தல்.	இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அதிகார எல் லைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததால் இது தொடர்பாக மேலதிகக் அவதானிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை
20	**புகையிரத** இருக்கை முன்பதிவுகள் தொடர்பாக மொபிடெல் நிறுவனத்துடனான ஒப்பந்தம் .	குழுவின் பரிந்துரை எதுவும் இல்லை.
21	**புகையிரதம்** மூலம் சுண்ணாம்புக்கல் கொண்டு செல்வதற்காக என்ஜின்கள் மற்றும் சாரதிக ளை வழங்கியதற்கான நிலுவைத் தொகையை வசூலித்தல்	குழுவின் பரிந்துரை எதுவும் இல்லை.
22	ஆர்டர் செய்யப்பட்ட பொருட்கள் சரியான தரத்திலும் கோரப்பட்ட அளவுகளிலும் பெறப்பட்டுள்ளனவா என்பதைச் சான்றளிக்காமல் விநியோகஸ்தர்களுக்குப் பணம் செலுத்துவதும், பொருட்களை முழுமையாக வழங்காததால் செலுத்த வேண்டிய தொகையை வசூலிக்கத் தவறுவதும் .	குழுவின் பரிந்துரை எதுவும் இல்லை.
23	**புகையிரத** மூலம் பண்டப் போக்குவரத்து.	இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அதிகார எல் லைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததால் இது தொடர்பாக மேலதிகக் அவதானிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை.
24	**புகையிரத** விபத்துகள்.	இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அதிகார எல் லைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததால் இது தொடர்பாக மேலதிகக் அவதானிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

25	இலங்கை **புகையிரத திணைக்களத்தின்** ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் .	இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அதிகார எல்லைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததால் இது தொடர்பாக மேலதிகக் அவதானிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை.
26	நிகழ் நிலை **புகையிரத** இருக்கை முன்பதிவு.	குழுவின் பரிந்துரை எதுவும் இல்லை.
27	ஹட்சன் டெலிகம்யூனிகேஷன்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் இலங்கை **புகையிரத திணைக்களம்** ஆகியவற்றால் **புகையிரத** பாதையில் ஒரு கூட்டுத் திட்டத்தை செயல்படுத்துதல்	இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அதிகார எல்லைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததால் இது தொடர்பாக மேலதிகக் அவதானிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை.
28	**புகையிரத** போக்குவரத்து மற்றும் **புகையிரதத்தில்** உள்ள வசதிகள்	இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அதிகார எல்லைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததால் இது தொடர்பாக மேலதிகக் அவதானிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

பாராளுமன்ற பொது கணக்கு குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை புகையிரதத் திணைக்களம் தொடர்பான அறிக்கை தொடர்பாக கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் நிலையியல் கட்டளை இலக்கம் 119(4)-இன் கீழ் எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பன தகவல்கள் இதன்மூலம் தாழ்மையுடன் சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஒப்பம்
கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும
செயலாளர்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு